# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம் (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஓகத்து மாதம் 24 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1990, ஓகத்து மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : ரூபா 1.00*

**1990 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம் (திருத்தச்) சட்டம்**

*[1990, ஆகஸ்ட் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ.—ஓ 35/89

**1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழக சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள "மூன்றாண்டுக் காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்கு பதிலாக, "மூன்றாண்டுக் காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் : 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

ஆயின், எவ்வாறாயினும், மூன்று ஆண்டுகளைக் கொண்ட காலப் பகுதியொன்றுக்கு பதவி வகித்துள்ளவரான ஏவுநர் ஒருவரை, ஓராண்டுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு பதவியில் நீடித்திருப்பதற்கு சனாதிபதி அனுமதிக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 7 ஆ என்னும் பிரிவு என்றவாறு பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"வேந்தர்

7 ஆ. (1) கலைக்கழகத்துக்கு வேந்தர் ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் சனாதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்படல் வேண்டும். வேந்தரே கலைக்கழகத்தின் தலைவராய் இருத்தல் வேண்டும்;

அவரது பெயர் நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு அவர் பதவி வகித்தல் வேண்டும்; அத்துடன் அவர் சமூகமாயிருக்கும்போது கலைக்கழகத்தின் ஏதேனும் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(2) இறப்பு மூலம், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட பதவி துறப்பு மூலம் அல்லது சனாதிபதியினால் அகற்றப்படுவதன் மூலம் வேந்தரினால் பதவி வறிதாக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய வேந்தரை அடுத்துறுவதற்

2—ள 009725—1,095 (90/06)

கென பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான ஆள், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு வேந்தர் பதவியை வகித்தல் வேண்டும்.

(3) கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவுக்கான நடவடிக்கைமுறை விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்".

**ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.".